# அலகு VI

## நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்புற மக்களின் சமுதாயப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கை மரபுகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் வாய்மொழி இலக்கியமே நாட்டுப்புற இலக்கியம். இதன் அமைப்பையும் வடிவத்தையும் அடிப்படையாகக் கொண்டு இதனை நாட்டுப்புறப்பாடல்கள், கதைப் பாடல்கள், நாட்டுப்புறக் கலைகள் எனப் பலவாறாகப் பிரிக்கலாம். நாட்டுப்புறப் பாடல்கள் வாழ்வின் கருவறையில் தொடங்கி கல்லறைவரைத் தொடர்கின்றன. தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழிற்பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், ஏசல், நலுங்கு, ஊஞ்சல் பாடல்கள் என இவ்வாறு நாட்டுப்புறப் பாடல்கள் விரியும். ஒரு நாட்டுப்புறப்பாடல் கதையைத் தழுவி வருமானால், அதனைக் கதைப் பாடல் என்கிறோம். தேசிங்கு ராஜன் கதை, கான்சாகிப் சண்டை, கட்டபொம்மன் கதைப்பாடல், நல்லதங்காள் கதை போன்றவை கதைப் பாடல்களாகும். நாட்டுப்புறப் பாங்கில் வாய்மொழியாக வழங்கி வரும் கதைகள் நாட்டுப்புறக் கதைகளாகும். நாட்டுப்புற இலக்கியங்கள் வாழ்வியற் கூறுகளை உள்ளடக்கியனவாகும். மக்களின் வாழ்வியலோடு ஒட்டிய நீதிக் கூற்றுக்களை நாட்டுப்புறப்பாடல்களில் காணலாம். வழக்குகளையும், அவற்றின் மீதான விதிகளையும் உட்கொண்டு பல பாடல்கள் அமைகின்றன.

வாய்மொழி இலக்கியங்களைத் திரட்டி வெளியிடுவதற்கும் அவற்றைத் திறனாய்வு செய்வதற்கும் நாட்டுப்புறக் கலைஞர்களை நேர் கண்டு, மறைந்துவரும் நாட்டுப்புறக் கலை வடிவங்களைக் கண்டறிந்து அவற்றைப் பேணுவதற்கும் மாணவர் திறன் பெற வேண்டும் என்ற நோக்கில் இவ்வலகு அமைக்கப்பபட்டுள்ளது. தற்காலப் படைப்புகளில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கினை மாணவர் புரிந்து கொள்ளவும் இப்பகுதி உறுதுணை செய்யும்.

# 14. ஏலேலோ! ஏலேலோ!

இப்பாடல் பகுதி ‘நாலு வகைப் பூவெடுத்து’ என்னும் நாட்டுப்புறப் பாடல்கள் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. சாகித்திய அக்காதமிக்காக இதனைத் தொகுத்தவர் முனைவர் சு. சண்முக சுந்தரம்.

கொங்குப் பகுதியில் வழங்கப்படும் தூளிப்பாட்டு இது. தூளி என்றால் ஊஞ்சல் என்று பொருள். கோடைக் காலத்தில் காடுமேடுகளில் ஆடு மாடு மேய்ப்போரும் விறகு சேகரிப்போரும் தூளி ஆடுவர். புளிய மரத்திலோ, ஆல மரத்திலோ, வேப்ப மரத்திலோ உள்ள கிளைகளில் நீண்ட கயிற்றின் இரு நுனிகளையும் முடிந்து கயிற்றின் மேல் கோணிப்பை இட்டு அதன் மேல் அமர்ந்து ஆடுவர். அப்போது பாடுவது இது.

1. மூக்குத்தி கள்ளியிலே ஏலேலோ கும்மி
ஏலேலோ
முன்னூறு பச்சக் கிளி ஏலேலோ கும்மி
ஏலேலோ
அதிலெயொரு பச்சக்கிளி ஏலேலோ கும்மி
ஏலேலோ
ஆளெப் பகட்டுதம்மா ஏலேலோ கும்மி
ஏலேலோ

2. கட்டுச் சாதம் கட்டியல்லோ ஏலேலோ கும்மி
ஏலேலோ
வாசப்படி தாண்டத் தாண்ட ஏலேலோ கும்மி
ஏலேலோ
பொல்லாத சகுனமம்மா ஏலேலோ கும்மி
ஏலேலோ
பொல்லாத சகுனத்தே ஏலேலோ கும்மி
ஏலேலோ
போயுருஞ்சு பாக்க வேணு ஏலேலோ கும்மி
ஏலேலோ

3. கருங்கடலு ஓரத்திலே ஏலேலோ கும்மி
ஏலேலோ
கருங் காடெ கூவுதம்மா ஏலேலோ கும்மி
ஏலேலோ
கருங் காடெ சத்தமல்ல ஏலேலோ கும்மி
ஏலேலோ
கருப்ப சத்தந் தோணுதம்மா ஏலேலோ கும்மி
ஏலேலோ

4. செங்கடலு ஓரத்திலே ஏலேலோ
கும்மி ஏலேலோ
செகப்புக் காடெ கூவுதம்மா ஏலேலோ
கும்மி ஏலேலோ
செகப்புக் காடெ சத்தமல்ல ஏலேலோ
கும்மி ஏலேலோ
செகப்பி சத்தந் தோணுதம்மா ஏலேலோ
கும்மி ஏலேலோ

5. மருதைக்குந்தாம் போகும் வண்டி
ஏலேலோ கும்மி ஏலேலோ
மயிலுகெல்லா(ம்) ஏறும் வண்டி ஏலேலோ
கும்மி ஏலேலோ
மயிலுகளெ ஏறவுட்டு ஏலேலோ
கும்மி ஏலேலோ
மயங்குதம்மா ரயிலுவண்டி ஏலேலோ
கும்மி ஏலேலோ

6. கொலுந்துக்குத்தான் போகும்வண்டி
ஏலேலோ கும்மி ஏலேலோ
குயிலுகெல்லா(ம்) ஏறும் வண்டி ஏலேலோ
கும்மி ஏலேலோ
குயிலுகளெ ஏறவுட்டு ஏலேலோ
கும்மி ஏலேலோ
குலுங்குதம்மா ரயிலுவண்டி ஏலேலோ
கும்மி ஏலேலோ

**விடை காண்போம்**

- ஊஞ்சல் பாடலில் ‘மூக்குத்திக்கள்ளி’ எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகிறது?
- கட்டுச்சாதம் கட்டி வேலைக்குச் செல்லும் போது என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தனவாகக் கூறப்படுகிறன?
- மருதைக்குச் செல்லும் வண்டியின் நிலை இப்பாடலில் எவ்வாறு கூறப்படுகிறது?

# 15. உலகுடைய பெருமாள் கதை

நாட்டுப்புறப் பாடல்களைப் போலவே, நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் வழிவழியாக வந்த வாய் மொழி இலக்கியங்களே, கதைப்பாடல்கள், சமுதாயத்திலுள்ள சாதிக் கொடுமைகளையும் அந்தந்தக் காலத்து அரசியல் நிகழ்ச்சிகளையும் அந்தந்தக் காலத்தில் பிரபலமாகிய வீரர்களைப் பற்றியும் சுவையாகக் கூறுகின்றன. குமரிமாவட்டத்தில் வழங்கி வருகின்ற நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் ஒன்றாகிய உலகுடைய பெருமாள் கதையின் ஒரு பகுதி இங்குப் பாடப்பகுதியாக உள்ளது. இக்கதைப் பாடலைச் சுவடிகளினின்றும் பதிப்பித்து வெளியிட்டவர் முனைவர் தி. நடராசன்.

**முன்கதைச் சுருக்கம்**

பொன்னுப் பெருமாள், மாலையம்மை என்போருக்கு ஐந்து ஆண்மக்கள். அவர்களுள் மூத்தவன் குலசேகரன். ஏனையோர் முகில் பெருமாள், முடி விளங்கும் பெருமாள், வனராதையன், மதுரை வீரப்பெருமாள். இவர்கள் ஐவரும் ஐவர் ராசாக்கள் என அழைக்கப்படுவர். பொன்னுப் பெருமாள், மாலையம்மை தம்பதியினருக்குப் பொன்னருவி என்ற பெயர் கொண்ட ஒரு பெண் குழந்தையும் உண்டு. பொன்னும் பெருமாள் என்பவருக்குப் பொன்னருவியை மணம் செய்வித்தனர். இவர்களுக்குப் பிறந்த குழந்தைக்குக் கதிரவன் பெயரான ‘உலகுடைய பெருமாள்’ என்று பெயரிடப்பட்டது.

குழந்தை வளர்ந்து ஐந்து வயதானதும் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட்டது. திருநீலகண்ட கணக்கர் என்பவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சிறுவனுக்குக் கல்வி கற்கவெனத் தனிக் கல்விச் சாலை கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. சோதிடனை அழைத்துச் சோதிடம் கேட்டு நல்ல நாள் ஒன்றில் சிறுவன் பள்ளிக்குச் சென்றான். உலகுடைய பெருமாள் கல்வி கற்றலை இப்பாடப் பகுதி விளக்குகிறது.

**கல்வி கற்பித்தல்**

யஞ்சி வயதிலே எளுத்தோத
ஆரோடே யெளுத்தோத
யறிவுஞ் சொல்லுந் தாயாரே
திருநாடு தனில் வாளும்
திரு நீலகண்ட கணக்கரோடே
திருவெளுத்துப் படிக்க வேணும்
தீரனுல குடைய பெருமாளும்
அன்னேரம் தாயாரும்
ஓட்டனைத் தானோட விட்டார்
கச்சை கெட்டி எண்ணையிட்டு

கையில் செங்கோல் தொளுதெடுத்தான்
அஞ்சல் வய்த்து தொங்கலோடி
அமுது சம்பா வயல்க் கடந்து
அமுது சம்பா வயல்க் கடந்து
ஆசாரி பள்ள மிட்டான்
இடை நாடு தனையுமிட்டு
திரு நாட்டிலே சொல்லுவானாம்
திரு நீலகண்ட கணக்கருட
விடுதியிலே சொல்லுவானாம்
அண்ணாவி அண்ணாவி யென்று
என்று ரண்டு விளி விளித்தான்
ஆரு தம்பி தூதுவனே
என்பதியில் விளித்த தெல்லாம்
உத்த வய்கை படைவீட்டில்
உலகுடைய பெருமாள்க்கு

உலகுடைய பெருமாள்க்கு
திருவெளுத்து படிக்க வேணும்
அந்தமொளி தனைக் கேட்டு
அண்ணாவியும் பிறப்படுவார்
ஏடெடுத்தார் குடை யெடுத்தார்

எளுத்தாணி தொளுதெடுத்தார்
எளுத நல்ல சிறுபிள்ளைகள்
எல்லோருங் கூடி வர
ஓட்டனவன் முன்புமாக
யண்ணாவி பின்புமாக

ஒரு னொடியில் லோட்டனவன்
உறுதியுடன் கூட்டி வந்தான்
அண்ணாவியை கண்ட போது
அளகனுலகுடைய பெருமாளுந்தான்
நாலடி முன்னெதிரே சென்று

நமக்காஞ் செய்கிறாராம்
கைப் பிடித்து அண்ணாவியும்
கோவிக் கல்லில் சொல்லுவாராம்
கோவிக் கல்லில் சென்றல்லவோ
தாயாரை யடி தொளுதார்

அன்னேரந் தாயாரும்
ஓடாவியை வரவளைத்து
வசனவனும் வந்தல்லவோ
தாயாரை யடி தொளுதார்
ஏனோதான் தம்புரானே

இனையளைத்த கரும மெல்லாம்
என்னுடைய மாந்தையரே
பள்ளிக் கூடங் கெட்ட வேணுமென்றார்

நாளான நாளையிலே
சோதிரியை வரவளைத்தார்
சோதிரியை வரவளைத்து
எளுத்தோத முகிள்த்த மிட்டார்
சென்றிருந்து புரட்சம் வய்த்து
சிறக்கவே கேள்க்க வென்ன
நன்றி செறி யசுபதியில்
நாயிறாச்சை யுதைய காலம்
திருவெளுத்து படிக்க வேணும்

தீரனுலகுடைய பெருமாள்க்கு
நாளான நாளையிலே
பள்ளிக் கூடத்தில் செல்லுவாராம்
பள்ளிக் கூடத்தில் சென்றல்லவோ
பள்ளிக் கூடத்தை யலங்கரித்தார்

வாய்ப் பாடங் படிக்கிறாராம்
நிலையெழுத்து முகிள்த்தங் கொள்ள

வேணு மென்று திருவிளமாய்
பொன்னி னல்ல கலமதிலே
புளுதியிலே எளுதுவாராம்
உத்த உலகுடைய பெருமாளும்
அரி அரியென்று சொல்லி
ஓலையிலே எழுதுவாராம்

வாசித்தாரே மன்னவரும்
ஆசானை அறியாமல் அரசர்பள்ளி முறண்டெளுதி
அரசர் பள்ளி முறண்டெளுதி அண்ணாவி கய்க்கொடுக்க
வாங்கினதோர் பள்ளி முறண்டை
வாசிக்கவும் மாட்டாமல்

வாசிக்கவும் மாட்டாமல்
மலங்கி விட்டாரண்ணாவியும்
ஓடியங்கே யெளுந்திருந்து
உத்த திருக்கய் தனைப்பிடித்து
நன்று நன்றுலகுடைய பெருமாள்

நாட்டிலுன்னை போலே யுண்டோ
பண்டே உம்முடைய மாமன்மார்கள்
எம்மோடே படித்தாரல்லோ
உம்மைப் போலே படித்தவர்கள்
உலகிலுண்டோ பெருமானே

அண்ணாவியு மவருமாக
அம்மை தாயாரை யடி தொளுது
பளைய பெட்டி ஓலை தன்னை
பரிவினுடன் வாசித்தாராம்
சேமமாக ஒரு மாநிலம்

செப்பமாக யிறை கூலியுமிட்டு
நூத்தெட்டுப் பண மெடுத்து
குருத் தெட்சனை தான் கொடுத்து
நன்மைதான் வரவே சொல்லி
நடந்தவர் தன் பதியில் போனார்

மன்ன னுலகுடைய பெருமாளும்
வைய்கை படை வீடாண்டிருந்தார்.

**விடை காண்போம்**

- உலகுடைய பெருமாளின் பெற்றோர் யார்?
- உலகுடையபெருமாள்கதை எந்த வட்டாரத்தில் வழங்கப்படுகிறது?
- வரலாற்றுக் கதைப்பாடல்கள் என்றால் என்ன?
- 'உம்மைப் போலே படித்தவர்கள் உலகிலுண்டோ பெருமானே' - யார், யாரிடம் கூறியது? கூறக் காரணம் என்ன?
- உலகுடையபெருமாள் கல்வி கற்றநிலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

# 16. காக்கா வெட்டி

நாட்டுப்புறப் பாடல்களைப் போலவே நாட்டுப்புறக்கதைகளும் வாய்மொழியாகவே தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இக்கதைகள் மிக்க சுவையுடையன. அக்காலப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பண்பாட்டுக்கூறுகள் போன்றவற்றைக் காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றன. கதை கூறும் பாணியில் பழைய கூறுகளைப் பெற்றிருப்பதால், இவை இன்றைய சிறுகதையின் இலக்கணத்தைப் பெறவில்லை.

'கிராமங்களின் கதை' என்ற நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது இக்கதை, இத்தொகுப்பை வெளியிட்டவர் பா. செயப்பிரகாசம். இவர் மூன்றாண்டுகள் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றிய பின்னர், அரசுத்துறையில் வேலைக்குச் சேர்ந்தார். சிறுகதை, குறுநாவல், கவிதை, விமர்சனம் போன்ற இலக்கியத்துறைகளில் ஆழ்ந்த பயிற்சியும் ஈடுபாடும் இவருக்குண்டு. இவருடைய பிற சிறுகதைகள் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

ஒருவனது வாழ்க்கையில் தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவனது வீரத்தால் விளைந்தவை என்று தவறாகக் கருதிய நாட்டு மக்களையும் அதனால் ஏற்பட்ட பின் விளைவுகளையும் சுவை படக் கூறுகின்றது இக்கதை.

கட்டின புருசன் சோம்பேறி. பொம்பிளையாள் முதலாளிமார்க வீட்டில வேலைக்குப் போறது, கம்மம்புல் குத்திக் கொடுக்கிறது, மிச்சம், மீதி பழையதை எடுத்து வர்றதுன்னு இவனுக்குச் சோறு போட்டுக்கிட்டிருந்தா.

ஒரு நா அவ கேட்டா "வருசமெல்லாம் இப்படிப் படுத்துக் கெடந்தா என்னய்யா செய்யறது?"

"நா என்ன செய்வேன். எனக்கு எவன் வேலை தருவான்?".

"ஏதாவது மரம், மட்டைய வெட்டுறது; வெறகு கட்டிக்கொண்டு போய்க் கடையில போடுறது. ஆகமா கஞ்சி தண்ணி குடிச்சிக்கிரலாமில்லே"

அவன் அரிவாள எடுத்திட்டு, விறகு வெட்டப் போனான். அரிவாளை தெரு வழியே வீசிட்டுப் போனானல்ல, குறுக்கே வந்த காக்காய் வெட்டுப் பட்டுக்கிருச்சி.

உடனே பொஞ்சாதிக்காரி "எம்புருசன் காக்காயை வெட்டிட்டான். காக்காயை வெட்டிட்டான்"ன்னு கூப்பாடு போட்டாள். ஊர் பூராவும் தெரிஞ்சிருச்சி.

இப்படி ஒரு கெட்டிக்காரன் இருக்கானே. ஆட்டுக்கிடையில் அன்னாடம் புலி வந்து அடிச்சித் தின்னுது. இவன கிடை காவலுக்கு அனுப்பனுமே என்று யோசித்தார்கள். "யம்மா, ஆடுகளை புலி வந்து தின்னுட்டு போகுது. ஒங்க வீட்டுக்காரரை கிடைகாவலுக்கு அனுப்பனும். காக்காயையே வெட்டிட்டாரே. புலியை லேசில விடுவாரா?" என்றார்கள். அப்ப அவர்கள் ஒரு நிபந்தனை போட்டார்கள்.

"கிடைக்காவல் காத்திட்டு, அடையாளத்துக்கு ஒரு இளங்கிடாயைப் பிடிச்சிட்டு வரணும்"

பொம்பளையாள், புருசனிடம் சொல்வா;

"நீ ஒரு சாக்கை எடுத்துக்கிட்டுப்போ. அதை கிடை வாசல்ல விரிச்சி வச்சிக்கிட்டு ஒம்பாட்டுக்கு நில்லு. அப்ப கிடாய் வந்து நுழையும் குபீர்னு பிடிச்சிக்கட்டிட்டு வந்திரு"

அது மாதிரியே இவன் சாக்கை விரிச்சி வச்சிக்கிட்டு இளங்கிடாயாப் பிடிச்சிரலாம்னு நிக்கிறான். நடுச்சாமத்தில புலிவந்து பாய்ஞ்சது, "ஆஹா, கெடாய் வந்து மாட்டிக்கிருச்சி" என்று அப்படியே சாக்கு மூட்டையில கட்டிப்போட்டு சுமந்துகிட்டு ஊருக்கு வந்து சேர்ந்தான்.

"கிடாயைப் பிடிச்சிட்டுவான்னா, புலியையே பிடிச்சி வந்து நிக்கிறானே" என்று ஊர்க்காரர்கள் அதிசயித்தார்கள். நாட்டில இவன மாதிரி கெட்டிக்காரன் இல்லே. இன்னிமே நீ கிடை காவலுக்குப் போக வேண்டாம். வாழைத் தோட்டத்தில யானை வந்து அழிமானம் பண்ணுது. வாழைக் காவலுக்கு போய் வந்திரு. என்றார்கள்.

காக்கா வெட்டி தயங்கினான். அப்ப பொம்பளையாள் சொல்வா.

"ஒரு கத்தி கொடுக்கறேன். எல்லாப் பக்கமும் வேலி போட்டிருக்கிறதினாலே யானை, வாசல் வழியாகத்தான் நுழையும். நீ கத்திய எதிர்த்தாப்பில இருக்கிற வாழையிலே மறு பக்கம் வர்ற மாதிரி குத்தி வச்சிரு. யானை வந்ததும், வாய் வைக்கும். வந்து தின்னவுடனே ஈட்டி மாதிரி கத்தி குத்தி செத்துப் போகும். அந்த கத்தியை எடுத்து யானை வயித்துல குத்தி வச்சிட்டு வந்திரு"

இவன் கத்தியை முத வாழையில் குத்தி வச் சிட்டுக் காத்திக்கிட்டிருக்கான். யானை வந்தது. வந்து தின்னதும் தொண்டை கிழிபட்டு செத்துப் போனது. கத்தியை எடுத்து யானை வயித்தில் குத்தி வச்சிட்டு இவன் வீட்டுக்கு வந்திட்டான்.

போய்ப் பாருங்க. யானையைக் கொன்னு போட்டாரு எம் புருசன் என்றாள். கிராமத்தார்கள் போய்ப் பார்த்தால் யானை வயிறு கிழிப்பட்டுச் செத்துக் கிடக்கிறது.

இந்த நாட்டு ராசாவுக்கும் அடுத்த நாட்டு ராசாவுக்கும் கலாட்டா, (சண்டை) நம்ம யானை வெட்ட வீரன் இருக்கான்ல, இவனத்தான் சண்டைக் களத்துக்கு அனுப்பனும்னு ராசா முடிவு செய்தார்.

அவனோட பொம்பிளையாளைக் கூப்பிட்ட னுப்பினார். "யம்மா, ஒம் மாப்பிள்ளையத்தான் (புரு சன்) நம்பியிருக்கோம். நாளைக்கு கலகத்துக்குக் கூட் டிட்டுப் போறோம். தயார் பண்ணி வை" என்றார்.

"எஜமான் எம் புருசனுக்கு நல்ல குதிரையா பாத்துக் கொடுங்க. நா அனுப்பி வைக்கிறேன்" என் றாள்.

"நா கலகத்தில எந்தக் காலத்தில போய் அடிச் சேன். நான் போய்ச் சாகவா?" என்றான் புருஷன் காரன்.

அந்தக் குதிரை லேசா சுண்டினாப் போதும், பறக்கும். ஆனா ஒத்தக் கண்ணு. பெண்டாட்டி இவன குதிரையில ஏற வைச்சி, கீழ விழாம, கயிற் றால் குறுக்கும் மறுக்குமா வரிஞ்சு கட்டினா.

சண்டைக்குத் தயாரா, படைகள் அங்க பாதி, இங்க பாதியா நிக்குது. குதிரையைத் தட்டினவுடனே கண்ணு மண்ணு தெரியாம பறக்கது. அங்ஙன ஒரு லேசான பனை. பயத்தில இவன் சேத்துப் பிடிச்சான்ல, பனைவேரோடு பிடுங்கிட்டு வந்திருச்சி. பனையும் இவனுமா பறக்கிறாங்க.

எதிர்பக்கம் இருக்கிறவங்க, பாத்தாங்க "சே இவன் பனையை இல்லே பிடுங்கிட்டு வர்றான். இனிமே இங்க நிக்கப்படாது. பனையை பிடுங்கிட்டு வர்ற பய, நம்மள தவிடாக்கிர மாட்டானா" என்று பயந்து ஓடிவிட்டார்கள்.

ராசா சந்தோசமாகி ஒனக்கு என்ன சன்மானம் வேணுமோ கேளுன்னார்.

இவன் "மகாராஜா, எனக்குப் பணியாரத்து மேல ஆசை, பணியாரம் வேணும்" ங்கிறான்.

"பணியாரம் தானே, அண்டா அண்டாவா கொண்டு வந்து கொட்டச் சொல்றேன்" என்றார்.

"அவிச்சிப் போடுங்கடா, எவ்வளவு திங்க ணுமோ திங்கட்டும்" என்று கட்டளை போட்டார்கள்.

அன்றாடம் உழைத்துக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிற கிராமத்து மக்களின் ஆசை அவ்வளவுதான். என்னதான் ராசா கேட்டாலும், அவர்களின் அட்டுப்பிடித்த தரித்திரம் அதற்கு மேல் யோசிக்க வைக்கவில்லை. அவர்களின் யதார்த்த நிலை என்னவோ அதிலிருந்தே கற்பனை யோசிப் பும் செய்கிறார்கள். அவர்களுக்குக் கற்பனையி லாவது வாய்க்கு ருசியாய்ச் சாப்பிட வேண்டு மென்பதுதான்.

இதில் பொங்கி வழிவது, கதை சொல்லியின் ருசிப்பான சொல்வளம், போர் என்றோ யுத்தம் என்றோ சொல்லவில்லை. அது எழுத்துப் புத்தகத் தில் அறியப்பட்ட சொல்.

கலாட்டா, கலகம் என்கிறார் கதை சொல்லி. இது எழுத்து வாசனை அண்டாத பேச்சு வழக்குச் சொல்; மக்கள் மொழி.

குத்திக் கொடுக்கிறது, செய்றது
மரம், மட்டையை வெட்டுறது
ஆகமா கஞ்சி, தண்ணி குடிச்சிக்கிரலாம்
யானை வெட்டி, புலி வெட்டி
இது ஒரு பேச்சு இசை. இது மக்கள் மொழி.

பா. செயப்பிரகாசம்.

**விடை காண்போம்**

- இக்கதையில் வரும் தலைவனுக்குக் 'காக்கா வெட்டி' என்ற பெயர் ஏற்படக் காரணம் என்ன?
- "இவன மாதிரி கெட்டிக்காரன் இல்ல" என்று ஊர் மக்கள் அதிசயித்தது ஏன்?
- எதிர்நாட்டுப் படைகள் பயந்து ஓடியதற்கான கார ணத்தை எழுதுக.
- காக்காவெட்டி ராசாவிடம் என்ன சன்மானம் வேண்டுகின்றான்?

## கற்றல் செயல்பாடுகள்

❖ **பாடிமகிழ்வோம்**

- குழுக்களாகப் பிரிந்து, ஒவ்வொரு குழுவும் இப் பாடலுக்கு ஏற்ற மெட்டமைத்துப் பாடி மகிழ்வோம்.

❖ **அகராதி பார்த்துப் பொருள் எழுதுவோம்**

- ஓட்டன்
- கச்சை
- அஞ்சல்
- தொங்கல்
- அண்ணாவி
- கோவிக்கல்
- ஓடாவி
- மாந்தையர்
- புரட்சம்
- சோதிரி
- முறண்டு

❖ **அறிந்து கொள்வோம்**

- சமுதாயக் கதைப்பாடல்
- இதிகாச – புராணக் கதைப்பாடல்
- வரலாற்றுக் கதைப்பாடல்

❖ **திருந்திய வடிவம் எழுதுவோம்**

- எளுத்தோ
- கய்
- ஆரோடே
- சதிரம்
- தொளுது
- வைய்கை
- வய்த்து
- குருத்தெட்சணை
- முகிள்த்தம்

❖ **சரியானவற்றைக் கோடிட்டுக் காட்டுவோம்**

- உலகுடைய பெருமாள் கதை தொடர்பான பிற கதைப்பாடல்கள்
- கான்சாகிப் சண்டை/ ஐவர்ராசாக்கள் கதை/ மாலையம்மாள் கதை,
- உலகுடைய பெருமாள் கதை குமரி மாவட்ட வழக்கில் இராமப்பையன் அம்மானை/ பெரிய தம்பிரான் கதை என்று வழங்கப்படுகிறது.

❖ **திருந்திய வடிவம் எழுதுவோம்**

**மாதிரி** : ஆளெ – ஆளை

- காடெ
- அதிலெ யொரு
- தோணுதம்மா
- பச்ச
- செகப்பு
- அருஞ்சு பாக்க
- மருதை
- மயிலுகளெ

**மாதிரி** : பொம்பிளை – பெண்பிள்ளை
மாட்டிக்கிருச்சி – மாட்டிக்கொண்டது

- கெடந்தா
- வெட்டிட்டான்
- அனுப்பனுமே
- தின்னுட்டு
- எடுத்துக்கிட்டு

இது போன்று இக்கதையில் வருகின்ற பேச்சு வழக்குச் சொற்களைத் திரட்டி, அவற்றின் திருந்திய வடிவம் எழுதுவோம்

❖ **கட்டுரை எழுதுவோம்**

தமிழ்க் கவிதை இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு.
(சிலம்பு, கம்பராமாயணம், ஆழ்வார் பாடல்கள், சிற்றிலக்கியங்கள்)

- உங்களுக்குத் தெரிந்த நாட்டுப்புறப் பாடல்களில் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள்.
- நாட்டுப்புறப் பாடல்களில் வண்டிக்காரன் பாடல் கள்.
- நாட்டுப்புற பாடல்களின் தனித்தன்மைகள்

❖ **எனது குறிப்பேடு**

- உலகுடைய பெருமாள் கதை வாயிலாக நீங்கள் அறிந்த பண்பாட்டுக் கூறுகள்.
- அக்காலக் கல்விமுறை
- இப்பாடலைப் பிற நாட்டுப்புற ஊஞ்சல் பாடல் களுடன் ஒப்பிட்டுக.
- நாட்டுப்புறக் கதைப் பாணியில் அமைந்த கதை களைப் பேச்சு வழக்கு மொழியில் தருக.
- வாய்மொழியாக வழங்குகின்ற கதைகளைத் திரட்டி எனது குறிப்பேட்டில் சேர்த்துக் கொள்க.
- நகைச்சுவை நிரம்பிய நாட்டுப்புறக்கதை ஒன்றை எனது குறிப்பேட்டில் எழுதுக.
- இப்படி ஒரு கெட்டிக்காரன் இருக்கானே ஆட் டுக்கிடையில் அன்னாடம் புலி வந்து அடிச்சித் தின்னுது. இவன கிடைகாவலுக்கு அனுப்ப ணுமே என்று யோசித்தார்கள். “யம்மா ஆடுக ளைப் புலிவந்து தின்னுட்டுப் போகுது. ஒங்க வீட் டுக்காரரைக் கிடைக் காவலுக்கு அனுப்பணும். காக்காயையே வெட்டிட்டாரே. புலியை லேசில

விடுவாரா? என்றார்கள். அப்ப அவர்கள் ஒரு நிபந்தனை போட்டார்கள்'' இப்பகுதியைப் படித்துத் திருத்தமாக 'எனது குறிப்பேட்டில்' எழுதுக.

❖ **எனது நூலகக் குறிப்பேடு**

- நூலகம் சென்று வரலாற்றுக் கதைப் பாடல்களின் பெயர்களை அறிந்து, அவை கூறும் வரலாற்றுச் செய்திகளை 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுவோம்.
- தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள ஊஞ்சல் பாடல்களைத் திரட்டி 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுவோம்.
- நாட்டுப்புற நம்பிக்கைகள்
- பழமொழிகள், விடுகதைகள்

❖ **எனது படைப்பாற்றல் ஏடு**

இக்கதையின் மொழிநடை, கதை கூறும் உத்தி, கற்பனை, நகைச்சுவை, கதைக்கருத்து ஆகியவற்றைத் திறனாய்வு செய்து எனது படைப்பாற்றல் குறிப்பேட்டில் எழுதுக.

❖ **திரட்டுவோம் எழுதுவோம்**

- உங்கள் வட்டாரங்களில் வழங்கி வரும் நாட்டுப்புறக் கதைகளைத் திரட்டுங்கள். பெரியவர்கள் யாரிடமாவது கேட்டறிந்த கதைப்பாடலை எழுதுக.

❖ **கட்டுரை வரைவோம்**

- மறைந்து வரும் நாட்டுப்புறக் கலை வடிவங்கள் (கோலாட்டம்/ கழியலாட்டம், ஒயிலாட்டம்/ கும்மியாட்டம் போன்றன)
- இன்றைய சமுதாயப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் பழைய நாட்டுப்புறக்கலைகள் (தெருக்கூத்து, கதாகாலட்சேபம்)

❖ **வடிவமாற்றம் செய்வோம்**

- இப்பாடப்பகுதியை வில்லுப்பாட்டாக மாற்றி அமைத்து, இளைஞர் விழா/ பள்ளி ஆண்டுவிழாவில் கலைநிகழ்ச்சி நடத்துக.

**இலக்கணக்குறிப்பு எழுதுவோம்**

- ஏடெடுத்தார்
- செங்கோல்
- தொங்கல்
- கருங்கடல்
- முன்னூறு
- பொல்லாத சகுனம்

**வாசித்துப் பழகுவோம்**

**1. விடியற்காலை**

வெள்ளி முளைச்சுப் போச்சுதடா
விடிய கருக்கல் ஆச்சுதடா!
அள்ளித் தெளிச்ச முத்துக்கோலம்
அழிஞ்சு போவுது பாத்தியாடா!
செம்பரத்தைச் சேவல் கூவுறது
எம்பிட்டுத் தூரந்தான் கேக்கறது!
தொம்பங் குடிசையைச் சுத்திக்கிட்டு
கும்பலாகக் காக்காயும் கத்துதடா!
எருமை கணக்கா அசைஞ்சசைஞ்சு
ராவு வேளையும் போச்சுதடா!
குறுவை நாத்து குளையக் குளைய
குளுந்த காத்தடிக்குதடா!
கொளுந்து வெத்திலை மென்னு மென்னு
குதப்பித் துப்பின மேட்டுலே!
உளுது விட்ட சேரட்டைப் போல
உளுத்த பாட்டைப் பாத்தியாடா!
தூத்தி விட்ட களத்தி லெட்டன்
தொப்பி கிளம்புதே தெரியுதாடா!
ஆத்துத் தண்ணி ஆச்சுதின்னா
அந்தத் தண்ணியை மொண்டுக்கலாம்.

(உழவன் பாட்டு)

**2. கல்லுடைப்போர் பாட்டு**

கல்லொடச்சிக் களைப்பாச்சி லேலங்கடி லேலோ
கையிரெண்டும் புண்ணாச்சி லேலங்கடி லேலோ
புல்லறுத்துப் பொழைச்சிருந்தா லேலங்கடி லேலோ
புள்ளகுட்டி வாழ்ந்திருக்கும் லேலங்கடி லேலோ

வேகாத வெய்யிலிலே லேலங்கடி லேலோ
வெந்து நாமும் சாகிறோமே லேலங்கடி லேலோ
காலை முதல் கல்லொடைச்சி லேலங்கடி லேலோ
கால் வயிறு ரொம்பலியே லேலங்கடி லேலோ

ஊருவிட்டு ஊரு வந்து லேலேங்கடி லேலோ
ஓயாம ஒழைக்கிறோமே லேலேங்கடி லேலோ
ஏரு ஓட்டி பொழச்சிருந்தா லேலங்கடி லேலோ
எப்படியும் வாழ்ந்திருப்போம் லேலங்கடி லேலோ

**3. வெள்ளையத் தேவன் போருக்குப் புறப்பட மனைவி தடுத்தல்**

அந்தச்செய்தி கேட்டு வெள்ளையனும்
ஆரபாரமாகி எழுந்திருந்து

பஞ்சணை மேலே படுத்திருந்த
பசுங்கிளி அன்னத்தை தானெழுப்பி
செம்பிலே தண்ணீர் வார்த்து வாவென்று
சொல்லித் தீரனும் யன்புடன் தானுரைத்தான்

அந்த மொழி கேட்டு அன்ன மயிலாளு
மன்புடனவள் தானெழுந்து
கைச் செம்பில் நீர் வார்த்திடவே
கைச் செம்புத் தட்டி விழுந்திடுமாம்
கைச் செம்புத் தட்டி விழுந்திடவே

கலங்கினாள் வெள்ளையன் மங்கையர்தான்
போக வேண்டாஞ் சுவாமி போக வேண்டாம்
நானும்
பொல்லாத துற்குறி கண்டேனைய்யா
பங்சணை மெத்தையில் படுத்தி(ரு)க்க
பாவி துற்குணங் கண்டேனைய்யா
கருத்தப் பாண்டியன் தான் தறித்த
கழுத்தாபரணம் பொடியாகக் கண்டேன்
சிவத்தப் பாண்டியன் தறித்த
திருநாமம் பொடியாகக் கண்டேன்
கயத்தாத்து புளிய மரத்திலே

கட்ட பொம்மு தலை தூங்கக் கண்டேன்
கோட்டையைச் சுத்தி கும்பினி பாளையம்
கூட வளையவுங் கண்டேனைய்யா
குண்டுகள் பீறங்கி வைத்தடித்துக்
கோட்டை மதிலே நொருக்கக் கண்டேன்

ஆண்செடி வீசுந் தென் பாஞ்சை நகரி
லருத்துக் குமிக்கச் சமனங் கண்டேன்
பெண் செடி வீசுந் தென் பாஞ்சை நக(ரி)ல்
பிணமாய் உருளச் சமனங் கண்டேன்
ரெத்தங்களாகச் சமனங்களாகக் கண்டே

னிப்போ நடக்கக்கூடாது சாமியென்றாள்
போக வேண்டாமென்று, மங்கையரும்
புத்திகள் சொன்னாள் வெள்ளையற்கு
கண்கள் ரெண்டு நீர் சொரிய வெள்ளையற்
காலில் விழுந்து அடிதொழுதாள்

**தொடர் கருத்தறிவோம்**

**நீதிக்காக**

இக்கட்டுரையின் ஆசிரியர் திரு.சு. சண்முக சுந்தரம். பெங்களூர் தூய ஜோசப் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றியவர்; சிறந்த எழுத்தாளர்; நாட்டுப்புற இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்; நாட்டுப்புற இலக்கியங்களையும் கலைகளையும் வளர்ப்பதற்காகத் 'தன்னனானே' என்ற நாட்டுப்புற இதழை நடத்தி வருகிறார்; மேலும், மண்வாசனை வீசும் சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதி வருகிறார். 'சுந்தர பாண்டியன்' என்ற புனைபெயரிலும் இவருடைய கதைகள் வெளியாகியுள்ளன. இக்கட்டுரை நாட்டுப்புறச் சிந்தனைகள் என்ற அவர்தம் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடுக்கும் முறைகள் காலந்தோறும் வேறுபடும். பெரியபுராணத்தில் சிவபெருமானோடு வழக்காடினார் சுந்தரர்; அவ்வழக்கு வேறு. மனுநீதிச்சோழனோடு பசுவின் வழக்கும் முடிவும் வேறு. பாண்டியனோடு கண்ணகியின் வழக்கும் வேறு வகைதான்.

தமிழகத்தில் சில வழக்குகளைக் கிராம மக்களே தமக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளுகின்றனர். இதனைப் பஞ்சாயம்பேசல், நியாயம் பேசல் என்று அழைப்பர்.

தமக்குள் முடியாத வழக்குகள், வழக்குமன்றங்களில் விசாரிக்கப்படுகின்றன. வழக்குமன்ற வேலையை உயர்வாக எண்ணினாலும் அங்குப் போய் வழக்கில் சிக்கிக்கொள்வதை அவமானமாகக் கருதுகின்றனர்.

பாடல்கள், விளம்பரம், வாய்தா, விசாரணை வாதாடல், தண்டனை ஆகியவற்றையும் விளக்கியுரைக்கின்றன. இவற்றை வழக்கு முறைகளாகக் காணலாம்.

**பஞ்சாயம் பேசல்**

'அஞ்சாறு பேர்களோடு
பஞ்சாயம் பேசயிலே
மின்னுதய்யா உங்கலேஞ்சி
மூணுமைல் தூரத்துக்கு'

கிராமத்து வழக்குகளைக் கிராமத்து மக்களே கூடிப் பேசித் தீர்த்துவிடும் வழக்கம் உண்டு. இதனைப் **பஞ்சாயம்பேசல்** என்று அழைப்பர். இவ்வழக்கம் இன்றும் சில கிராமங்களில் உண்டு. போலீசாரின் குறுக்கீடுகள் இல்லாமல், கோர்ட்டு களின் தொந்தரவுகள் இல்லாமல் இன்றும் சில கிராமங்களில் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்.

பஞ்சாயம் பேச ஊர்ப்பெரியவர் என்ற தகுதி வேண்டும். ஒருவர் ஐந்தாறு பேர்களோடு பஞ் சாயம் பேசுகின்றார். பேசும்போது அழகான லேஞ்சி ஒன்றை அணிந்திருக்கிறார். அதன் அழகு மூன்று மைல் தூரத்திற்குக் கவர்ச்சியைத் தருகின்றது. இதனை இப் பாடல் விளக்கி உரைப் பதைக் காணமுடிகின்றது.

**நியாயங்கள் பேசல்**

‘மாடு திருடி விட்டு
மதிப்புக் கெட்டார் - உங்கள் ஐயா.
மாட்டு நியாயம் பேசவந்த
மந்திரியா உன்மாமன்.
கோழி திருடி விட்டுக்
குத்துப் பட்டார் - உங்கள் ஐயா.
கோழி நியாயம் பேசவந்தார்
குணமுள்ள உன்மாமன்’

கிராமப் பஞ்சாயத்துகளில் நியாயம் பேசல் என்ற முறை உள்ளது. பஞ்சாயம் யாரும் பேச லாம். நியாயம் பேசத் தலைவர்க்கே உரிமை யுண்டு. இவர்கள் நீதிபதியின் நிலையில் உள்ளவர்கள்.

**வாய்தா முறை**

‘திண்டுக்கல்லாம் சங்கதியாம்
தேசங்கோட்டு வாயிதாவாம்
வாயிதாவைத் தீத்துப் போட்டு
வந்திடுவார் இந்தவழி’

வழக்கு மன்றத்தில் வழக்கு விசாரிக்கும் நாளை ஒத்திப்போடுவதனை வாய்தா என்பர். இவ்வாறு ஒத்திப் போட்டுக்கொண்டே செல்வத னையே வழக்கு மன்றங்கள் வழக்கமாகக் கொண் டுள்ளன. வாய்தாவுக்குப் போய் வந்தே பலர் வறி யவர் ஆகிவிடுவர்.

**வாதாடும் முறை**

‘கோர்ட்டு திறந்திருக்கும்
குரிச்சி மெத்தை போட்டிருக்கும்
குரிச்சியிலே உட்கார்ந்து - ஜட்ஜோடே
வாதாடும் தருமரோ - உங்கள் ஐயா’

வக்கீல்கள் பிற வக்கீல்களோடு வாதாடுவர். வாதத்திறமையே வக்கீல்களுக்குப் பெயரையும் புகழையும் வாங்கிக் கொடுக்கும். அனுபவம் பெற்ற வக்கீல்கள் கூட ஆசனத்தில் அமர்ந்த வண்ணம் வழக்காடுவது முறையன்று. ஆனால் இப்பாட்டில் அமர்ந்த வண்ணம் வாதாடுவார். என்று பெருமையுடன் கூறுகிறாள். இது இல்லா ததை ஏற்றிச் சொல்வதாகும்.

திறந்த கோர்ட்டிலே நாற்காலிகள் போடப் பட்டிருக்கும் அழகினையும் இப்பாடல் விளக்கு கிறது. அந்த அழகான இருக்கைகளில் அமர்ந்தவண்ணம் ஜட்ஜோடு வக்கீல் வாதாடும் சிறப்பையும் கூறுகிறது இப்பாடல்.

‘சாலையிலே ரெண்டுமரம்
சாமிதுரை வைத்தமரம்
ஓங்கி வளர்ந்த மரம்
உயிர் வாங்கும் தூக்குமரம்’

தூக்குத் தண்டனை இப்பொழுது மிகவும் கொடிய தண்டனையாகக் கருதப்படுகிறது. இத னைத் தடைசெய்ய வேண்டும் என்று பல அறி ஞர் பெருமக்கள் கருதுகின்றனர். ஆனால், கொடிய குற்றவாளிகளுக்கு இத்தண்டனையை அளித்தனர். இதற்குத் தூக்குமரங்களை அமைத் திருந்தனர். மன்னராட்சிக் காலத்திலே இம்மரங் கள் நாட்டில் பெருகி இருந்தன.

**வழக்கு வகைகள்**

வழக்குகள் பல வகைப்படும். பலவகைக் காரணங்களுக்காக வழக்குத் தொடரப்படுவதைக் காணலாம். நாட்டுப்புறப் பாடல்கள் மூலமாகக் கொலை வழக்கு, பெண் வழக்கு, திருமண வழக்கு ஆகியவற்றைப் பற்றிய விபரங்களைக் காணலாம்.

**கொலை வழக்கு**

‘கூட்டம் நடந்த தென்ன
கொலைக் கேசு ஆனதென்ன
கூட்டத்தை விலக்கி விடு

கோட்டாரே என் தகப்பா

கோடி முகத்தை நான் பார்க்க’

கொலை வழக்கும் குற்ற வழக்கின் ஒன்று ஆகும். கொலை வழக்கு மிகவும் கொடிய வழக்கு ஆகும். இதற்குப் பெரிய தண்டனைகள் உண்டு. கேசு (case) என்பது வழக்கினைக் குறிக்கும் ஆங்கிலச்சொல். கோர்ட்டார் என்பது (court) கோர்ட்டில் உள்ள நீதிபதியைக் குறிக்கும்.

ஒரு ஒப்பாரிப் பாடல் கொலை ஒன்றைப் பற்றி விளக்குகிறது. கூட்டம் ஒன்று நடந்ததாகவும் அதனால், கொலை நிகழ்ந்ததாகவும் இங்கே கூறப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்ட பிணத்தைப் பார்க்க அப்பெண் துடிக்கின்றாள். அதற்குக் கோர்ட்டாரின் அனுமதியையும் கேட்கின்றாள். கொலை நடந்த இடத்தில் கூட்டம் அதிகமாக உள்ளது அதையும் விலக்கிவிடுமாறு வேண்டுகின்றாள்.

**திருமண வழக்கு**

பாமர மக்களிடையே கணவன் மனைவிக்குள் உள்ள உறவு துண்டிக்கப்படுவதற்காக வழக்கு மன்றங்களை நாடுவது வழக்கம். ஒருவன் தன் மனைவியை விவாகரத்துச் செய்ய விரும்பினான். ஆனால் அவன் மனைவி அதற்கு இசையவில்லை. இரண்டு பேரின் ஒப்புதலுக்குப் பின்னரே விவாகரத்துச் செய்ய முடியும்.

விவாகரத்தினை மறுத்து ஒரு பெண் புலம்புவதனை இப்பாடலால் அறிகிறோம். தன்னை உயிரற்ற சவமாகக் கருதுகின்றாள். தன் குழந்தையை மட்டுமாவது தன்னிடம் தர வேண்டும் என்று வேண்டு கிறாள். இதனை,

‘சங்கு மணியடிக்கும்
சர்க்காரு என்துரையே
சார்ந்திருக்கும் போலீசாரே
சர்க்காரு வக்கீலே – நான்
தந்ததை வாங்கிக் கிட்டு – என்
சவத்தையும் விட்டுடுங்கோ
குண்டு மணியடிக்கும்
கோர்ட்டாரு என் தொரையே – நான்
குடுத்ததை வாங்கிக்கிட்டு – என்
கொளந்தையை விட்டிடுங்க’

என்ற பாடல் விளக்குகிறது. சர்க்காரு துரையே என்பது நீதிபதியையே.

**கோட்டாரின் உயர்நிலை**

‘அரண்மனைக்கு மேற்கே
ஆரவல்லி நாடகமாம்
குறிச்சி போட்டுக் கூத்துப் பார்க்கும்
கோட்டார் உங்களப்பா’

நீதிபதி மிகவும் மதிப்பும் மரியாதையும் உள்ளவர். அவர் செல்லும் இடங்களில் எல்லாம் அவருக்குச் செல்வாக்கும் சிறப்பும் கிடைக்கும். நீதிமன்றங்களில் மட்டும் அல்லாமல் பிற இடங்களிலும் அவரது பெருமை பரவியிருக்கும்.

இத்தாலாட்டுப் பாடல், ஒரு நீதிபதி வெளியுலகில் பெறும் சிறப்பினை விளக்குகின்றது. அவர் கூத்துப் பார்க்கப்போகிறார். கூத்தோ அரண்மனைக்கு மேற்கே நடைபெறுகிறது. கூத்தின் பேயரோ ஆரவல்லி. பொதுவாகக் கூத்துப் பார்ப்பவர்கள் நின்று கொண்டோ தரையில் அமர்ந்து கொண்டோ பார்ப்பது வழக்கம். ஆனால் நீதிபதிக்கோ தனியா இருக்கை போட்டுக் கூத்தினைப் பார்க்குமாறு செய்கின்றனர்.

**❖ அகரவரிசைப்படுத்துவோம்**

- பின்வரும் வட்டார வழக்குச் சொற்களுக்குத் திருந்திய வடிவம் கண்டுபிடித்து அகர வரிசைப்படி எழுதுக.

அஞ்சாறு, மூணு, மூச்சுக் கட்டிக்கினு, எப்ப, வருவியோ, ஆக்கிடிச்சு, தாரேன், தீர்த்துப்போட்டு, போடயிலே, ரெண்டு, தொரை, கொளந்தை, குடுத்தது, பண்ணி, தண்ணி.

**❖ அறிந்து கொள்வோம்**

வேற்றுமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச்சொற்கள் அறிவோம்.

மாதிரி : கோர்ட் – நீதிமன்றம்

கேசு, வாயிதா, சர்க்கார், குரிச்சி, ஜட்ஜ், மேஜிஸ்ரட்டர், பிராது, டிப்டி மேஸ்திரி, கோர்ட்டார், ஐக்கோட்டு, போலீசு.

❖ **நம் நாட்டிலுள்ள பல நிலைகளிலான நீதி மன் றங்களை அறிந்து கொள்வோம்**

- முன்சீப் நீதிமன்றம் (Munsiff court)
- மாவட்ட நீதிமன்றம் (District court)
- உயர் நீதிமன்றம் (High court)
- உச்ச நீதிமன்றம் (Supreme court)

இவை மட்டுமன்றி

- மனித உரிமை ஆணையம்
- நுகர்வோர் நீதிமன்றம்
- குடும்ப நீதிமன்றம்

முதலிய பல்வேறுபட்ட நீதி மன்றங்களைப் பற்றிக் கேட்டறிந்து 'எனது குறிப்பேட்டில்' சேர்த்துக் கொள்க.

❖ **கலந்துரையாடுவோம்**

- பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீதிமன்றத்துக் குச் செல்வதா? அல்லது மக்கள் தாமே கூடிப்பேசித் தீர்வு காண்பதா? - எனும் தலைப் பில் குழுக்களாகப்பிரிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

❖ **எனது குறிப்பேடு**

- வழக்குமன்றத்தில் பயன்படுத்தும் சொற்களைக் கேட்டறிந்து அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்து 'எனது குறிப்பேட் டில்' எழுதுக.

**மாதிரி :** சமன்ஸ்- நீதிமன்றத்தில் செல்வதற்கான ஆணை.

❖ **எனது நூலகக் குறிப்பேடு**

பின்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றி நூலகம் சென்று வாசித்து 'எனது நூலகக் குறிப்பேட்டில்' எழுதுக.

- சுந்தரர் சிவபெருமானுடன் வழக்காடியது, நிகழ்ச்சியும் முடிவும்
- மனுநீதிச் சோழனுடன் பசு வழக்காடியது, நிகழ்ச்சியும் முடிவும்
- சிபி மன்னனுடன் பருந்து வழக்காடியது, நிகழ்ச்சியும் முடிவும்

❖ **திரட்டி வாசிப்போம்**

- செய்தித்தாளில் வரும் நீதிமன்ற வழக்குகள் பற்றிய செய்திகளைத் திரட்டி வகுப்பறையில் வாசியுங்கள்.
- நாட்டுப் புறப்பாடல் தொகுப்புகளைத் திரட்டி நூலடைவு செய்து வகுப்பில் வாசியுங்கள்.

❖ **சேகரிப்போம்;தொகுப்போம்**

- பதினான்கு வயதுக்குக் கீழேயுள்ள குழந்தை களுக்கான சட்டங்கள், பெண்களுக்கான சிறப் புச் சட்டங்கள், அரசாங்க அலுவலர்களுக்கான சட்டங்கள், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவற்றைச் சேகரித்துத் தொகுக்கவும்.
- உங்கள் வட்டாரங்களில் வழங்கிவரும் - நீதிமன் றம் தொடர்பான பழமொழிகளைப் பெரியவர் களிடம் கேட்டறிந்து திரட்டுங்கள்.

**மாதிரி :**

கோடு கண்டவன் ஓடு எடுப்பான்.

ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது.

- ஆண்பெண் இருவரின் கடமைகள், உரிமைகள் பற்றிய அடிப்படைச் சட்டங்களைத் தொகுப்போம்.

❖ **பாடலின் திரண்ட கருத்து எழுதுவோம்.**

மாடுதிருடி விட்டு
மதிப்புக் கெட்டார் - உங்கள் ஐயா
மாட்டு நியாயம் பேசவந்த
மந்திரியா உன்மாமன்.

கோழி திருடி விட்டுக்
குத்துப் பட்டார் - உங்கள் ஐயா
கோழி நியாயம் பேசவந்தார்
குணமுள்ள உன்மாமன்.

❖ **துணுக்கு மலர் வெளியிடுவோம்**

- திரட்டிய நகைச்சுவைத் துணுக்குகளைத் தொகுத்து 'நகைச்சுவைத் துணுக்கு மலர்' தயாரிக்க.

❖ **அடிப்படை உரிமைகளை அறிவோம்**

- வழக்குரைஞர் ஒருவரை அழைத்துவந்து மக்கள் அடிப்படை உரிமைகளைப்பற்றி இலக் கியமன்றத்தில் சொற்பொழிவு ஆற்றுக,

❖ **கதை எழுதுவோம்**

- முதியவர் வேடம் பூண்டு முறை செய்த கரிகால னின் செயலைக் கதைவடிவில் எழுதுக.

❖ **நடித்துக் காட்டுவோம்**

- மாணவர்களையே குழுக்களாய்ப் பிரித்து வழக் கறிஞர், நீதிபதி, வாதாடுபவர் முதலியோராக வேடமிடச் செய்து, சாலமன் தீர்ப்பை நடித்துக் காட்டுக.

❖ **செயல்திட்டம்**

- நாட்டுப்புறங்களில் வழங்கிவரும் நாட்டுப்புற மருத்துவச் செய்திகளைத் தொகுக்க.

❖ **விடை எழுதுவோம்**

- பஞ்சாயம் பேசல் என்றால் என்ன?
- வழக்கு முறைகள் யாவை?
- பஞ்சாயம் பேசுவதற்கான தகுதி யாது?
- நியாயம் பேசுவதற்கான உரிமை யாருக்குரியது?
- நியாயம் பேசுவதற்காகக் கிராமத்து மக்கள் கூடும் இடம் எது?
- வாய்தா என்றால் என்ன?
- நாட்டுப்புறப் பாடல் வழி அறியலாகும் வழக்கு முறைகள் யாவை?
- வழக்கு மன்றத்தில் பணியாற்றுபவர்கள் யாவர்?
- பழமொழிகளும் சட்டவியலும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**இலக்கணவிளக்கம் பெறுவோம்**

**நிரல்நிறை அணி**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இல்வாழ்க்கையின் பண்பு அன்பு; இல்வாழ்க்கையின் பயன் அறன் என்று கூறவந்த திருவள்ளுவர், அன்பு, அறன் என்னும் சொற்களை முதலடியில் கூறினார். அன்பு, அறன் என்னும் சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி, பண்பு, பயன் என்னும் சொற்களை இரண்டாம் அடியில் கூறினார். இவ்வாறு சொற்களை முதலில் ஒரு வரிசைப்படி கூறி அவற்றுக்கு ஏற்ற சொற்களைப் பின்னர் அதே வரிசைப்படி அமப்பது நிரல்நிறை எனப்படும்.

இவ்வாறு புலவர் ஒரு செய்யுளில் முதலில் சில சொற்களை ஒரு வரிசையாகக் கூறி, பின்னர் அச்சொற்களுக்கு ஏற்ற பொருளமைந்த சொற்களை அதே வரிசையாகக் கூறுவது நிரல் நிறை அணி எனப்படும்.

**விடை காண்போம்**

- நிரல்நிறை அணி- விளக்கம் தருக.
- பின் வரும் பாடல் நிரல்நிறை அணியாவது எப் படி?

**காரிகை மென்மொழியான் நோக்கால்**
**கதிரொளியாள்**
**வார்புருவத் தாலிடையால் வாய்தளிரால் –**
**நேர்தொலைந்த**
**கொல்லி வடிநெடுவேல் கோவ்கரும்பு விற்கரும்பு**
**வல்லி கவிர்மென் மலர்**



படம் பார்த்து கவிதை படைக்க